[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Case Number | **CC.No.314/2025** |
| Deposition of | PW - 1 |
| Name | : வல்லரசு |
| Father's Name/Husband Name | : முருகன் |
| Village | : பையர்நத்தம் |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 26 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11.05.2026**

**எதிரி ஆஜரில்லை, எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பையர்நத்ததத்தில் குடியிருந்து பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருகிறேன்.

கடந்த 01.01.2025 ம் தேதி எனது மாமா செல்வம் எனது மகள் தியாஸ்ரீ மகள் குகன்தாஸ் ஆகியோரை கடைக்கு அழைத்து செல்வதாக கூறி பையர்நத்ததத்தில் குறிஞ்சி நகர் பஸ் நிறுத்தம் இடது புறம் சாந்தா என்பவரது பெட்டி கடைக்கு அழைத்து சென்றார்.

பாப்பிரெட்டிபட்டி to பொம்மிடி நோக்கி வந்த TVS XL இருச்சக்கர வாகனத்தை இவ்வழக்கின் எதிரி பிரதீபன் என்பவர் வேகமாக ஓட்டி வந்து கடைக்கு ஓரமாக நின்றிருந்து எனது மகள் தியாஸ்ரீ என்பவர் மீது இடித்து விபத்து ஏற்படுத்திவிட்டதாக பகல் 12.30 மணியளவில் எனக்கு உடனே தகவல் தெரிவித்தார்கள் அருகில் இருந்த நான் சம்பவ இடத்திற்கு உடனே வந்து பார்த்தபோது இடது கால் எலும்பு உடைத்திருந்தது முகத்தில் சிராய்ப்பு காயம் இருந்தது. வலது பக்க நெஞ்சிலும் அடிப்பட்டிருந்தது. நான் உடனே எனது இருச்சக்கர வாகனத்தில் அடிப்பட்டிருந்த எனது மகளை பாப்பிரெட்டிபட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன்.

பின்னர் நடவடிக்கை எடுக்கவேண்டி பொம்மிடி காவல் நிலைய போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

இன்று என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

சம்பவத்தின்போது சம்பவ இடத்தில் 10, 15 நபர்கள் இருந்தார்கள்.

சம்பவத்தை யார் நேராக பார்த்தார்கள் என்று எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்பதால் யாருடைய கவனக்குறைவால் விபத்து நடைப்பெற்றது என்று எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிபட்டி**

[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Case Number | **CC.No.314/2025** |
| Deposition of | PW - 2 |
| Name | : **செல்வம்** |
| Father's Name/Husband Name | : இருதயராஜ் |
| Village | : B.பள்ளிப்பட்டி |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 36 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11.05.2026**

**எதிரி ஆஜரில்லை, எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பள்ளிப்பட்டியில் குடியிருந்து மரவேலை வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரியை தெரியும்.

கடந்த 01.01.2025 ம் தேதி நான் எனது தங்கை மகள் தியாஸ்ரீ மகன் குகன்தாஸ் ஆகியோரை கடைக்கு அழைத்து செல்வதாக பையர்நத்தததில் குறிஞ்சி நகர் பஸ் நிறுத்தம் இடது புறம் சாந்தா என்பவரது சாலையோரம் நின்றிருந்த தள்ளுவண்டி கடைக்கு அழைத்து சென்றேன். குகன்தாஸை எனது கையில் பிடித்திருந்தேன். தியாஸ்ரீ கடைக்கு அருகாமையில் எனது அருகில் நின்றிருந்தார்.

பாப்பிரெட்டிபட்டி to பொம்மிடி நோக்கி வந்த TVS XL இருச்சக்கர வாகனத்தை இவ்வழக்கின் எதிரி பிரதீபன் என்பவர் வேகமாக ஓட்டி வந்து கடைக்கு ஓரமாக நின்றிருந்து எனது மகள் தியாஸ்ரீ என்பவர் மீது இடித்து விபத்து ஏற்படுத்திவிட்டார். அப்போது நேரம் சுமார் பகல் 12.30 மணிக்கு மேல் இருக்கும்

தியாஸ்ரீக்கு இடது கால் எலும்பு உடைத்திருந்தது முகத்தில் சிராய்பு காயம் இருந்தது. வலது பக்க நெஞ்சிலும் அடிப்பட்டிருந்தது. நான் உடனே விபத்து குறித்து அ.சா.1 க்கு

தகவல் தெரிவித்தேன். பின்னர் அ.சா.1 சம்பவ இடத்திற்கு வந்து அவரது இருச்சக்கர வாகனத்தில் அடிப்பட்டிருந்த அவரது மகளை பாப்பிரெட்டிபட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்.

வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் தற்சமயம் கூறிய சாட்சியத்தை தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான்.

சம்பவ சமயத்தில் என்னுடன் 2 நபர்கள் இருந்தார்கள்.

மேற்கண்ட 2 நபர்கள் பற்றி போலீஸ் விசாரணையில் கூறினேன்.

எதிரி சரியான பாதையில் தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரிதான்.

சம்பவ இடமான ரோட்டு கடை வெள்ளை கோட்டுக்கு உட்புறமாக தான் உள்ளது.

நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைப்பெறவில்லை என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**<u>நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிபட்டி</u>**